திருமதி. கா. நல்லப்பன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொய்யல் ஆற்றில் கரூருக்கு சமீபத்தில் அணையை கட்டி அதிலிருந்து பெரியார் மாவட்டத்தில் சில பகுதிகளும், திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகளும் பாசன வசதிக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் வேறு ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது பெருந்துறை தாலுக்காவில் நீர் பாசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். இந்த இரண்டும் முரண்பட்டதாக இருக்கிறது. ஆகவே தெளிவாக அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மூ. யூசுப்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக்கேள்விக்கு பதில் வழங்குகின்ற நேரத்தில் பெரியார் மாவட்டத்தில் சில பகுதிகளும், திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகளும் பயன் பெறும் என்று சொல்லியிருந்தேன். பெருந்துறை வட்டம் பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த வட்டம் என்று நான் கருதுகிறேன். ஆகவே உறுப்பினர் அவர்கள் வினாவிற்கும், என்னுடைய பதிலுக்கும் எந்த விதமான முரண்பாடும் கிடையாது. சரியான பதிலை நான் ஏற்கனவே வழங்கியிருக்கிறேன்.

திரு ஜி. கே. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அணைக்கட்டு பகுதியிலிருந்து உபரி நீரை கொண்டுவந்து ஏறத்தாழ 46 ஆயிரம் ஏக்கர் நீர்ப்பாசனம் செய்வதற்கு அந்த பவானி சாகர் அணைக்கு மேலே உள்ள பகுதியில் பவானிக்குக் குறுக்கே அணையைக் கட்டி கால்வாய் வெட்டி கொடுக்கும்படி அரசுக்கு மனு கொடுக்கப்பட்டு பரிசீலிக்கப்படும் என்ற தகவலும் வந்து இருக்கிறது அந்தக்கால்வாய்க்கு அண்ணா அவர்கள் பெயரை வைக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரிடமும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அதுபற்றி ஏதாவது தகவல் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மூ. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா கால்வாய் அமைப்பதற்கான கோரிக்கை மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து வந்திருக்கிறது. அது இப்போது தீவிர ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்வுக்குப் பிறகு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

77—

பள்ளிப்பட்டு வட்டத்தில் பாசனக் கால்வாய் வெட்டும் திட்டம்

* வினா எண் 18285—திரு பூ. மு. நரசிம்மன் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டத்தில்

அய்யனேரி, வீராணத்தூர் எஸ். அக்ராவரம் ஆகிய கிராமங்களுக்குப் பாசனத்திற்குக் கால்வாய் வெட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்; (அ) ஆம்.

(ஆ) சுமார் ரூ. 17.89 லட்சம்

திரு பூ. நரசிம்மன்: மாண்புமிகு தலைவரவர்களே, நடப் பாண்டில் இப்பணி அரசால் எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. யூசுப்; மாண்புமிகு தலைவரவர்களே இப்பொழுது இத் திட்டம் ஆய்வு நிலையில்தான் உள்ளது. ஆகவே, ஆய்வுக்குப் பிறகுதான் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நில நிர்வாக ஆணையாளர் ஆகியவர்களின் பரிசீலனைக் குப்பிறகுதான் முடிவெடுக்க முடியும்.

நீலகிரி மாவட்டம், மஞ்சூரில் உள்ள
கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை

78—

(* வினா எண் 15-40) திரு. கு. ரமணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—(அ) நீலகிரி மாவட்டம், மஞ்சூரில் உள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை நிர்வாகம் அமைச்சர்களின் வருகைக் காக செலவு செய்த ரூபாய் எவ்வளவு?

(ஆ) அமைச்சர்களின் வருகையின் போது இப்படிப்பட்ட நிறுவனங்கள் என்ன செலவு செய்யலாமென்பதற்கு வரைமுறை கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு இரா. அருணாசலம்: (அ) ரூபாய் 5,912.25

(ஆ) முன்பு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இதுபோன்ற செலவிடும் தொகைக்கு வரைமுறைகள் நிர்ணயிக்கப்படவில்லை இதற்கான உச்சவரம்பு தற்சமயம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திரு கு. ரமணி; தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை ஏற்கனவே நஷ்டத்தில் ஓடிக்கொண் டிருக்கிறது என்பதும், நீலகிரியிலுள்ள தொழிற்சாலைகள் பற்றியும் அரசுக்கு நன்கு தெரியும். ஆனால், இம்மாதிரி வர வேற்புச் செலவுகள் என்று சொல்லி ஏராளமான பணத்தைப் பல தொழிற்சாலைகள் செலவு செய்து வருகின்றன. இந்த மஞ்சூர் தொழிற்சாலையிலேயும் அதே மாதிரி செலவு செய்யப் பட்டுள்ளது என்பது பொது மக்களிடத்தில் பெரும் பிரச்சனை யாக உள்ளது. ஆகவே, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்கு அமைச்சர்களோ அல்லது பெரிய அதிகாரிகளோ செல்லும்போது இன்னமுறையில்தான் அந்த வரவேற்பை அளிக்கலாம், இவ்வளவு பணம்தான் செலவு செய்யலாம் என்ற திட்டத்தை அரசு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.